# 1

# திருமறையைக் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன

*கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன? மார்க்க ரீதியாக தான் சார்ந்துள்ள நபரின் பதில்களைப் பொறுத்து, மேற்குறித்த கேள்விக்கான பதில் மாறுபடலாம், கிறிஸ்தவத்தை வெளிப்படையாய் ஒப்புக் கொள்கிற யாவரும் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் திருமறை சில உபதேசங்களை மையப்படுத்தி வெளிப்படுத்துகிறது. இந்தப் பாடத்தைக் கற்பதினால் சில அடிப்படைப் போதனைகளை விவாதிக்கப் போகிறோம்.*

*ஒருவருடைய விசுவாசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது கடினமானது. விசுவாசங்கள் செல்வாக்குள்ளவை; ஒருவருடைய நேரம் வரும்போது அவருடைய கருத்தைப் போல பலமிக்கது வேறெதுவும் இருக்க இயலாது என்று சொல்லப்படுவதுண்டு.[1] ஒருவருடைய விசுவாசங்களின் வல்லமை அவரது விதியை சீர்படுத்தவும் (வரலாற்று செல்வாக்குப் பெறவும்) செய்கிறது என்பதற்கு விசுவாசம் எனும் பெயரில் மற்றவர்களை கொன்றுகுவிக்கிற அளவுக்கு காணுகிற விருப்பங்களே சான்று. அவர்களுடைய புரட்டப்பட்ட விசுவாசங்கள் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் எப்படி சாகிறார்கள் என்பதை ஆணையிடுகிறது.*

*ஒருவர் எதை விசுவாசிக்கிறார் என்பதன் அடிப்படையில் அவர் எப்படி வாழ்கிறார் எப்படி செயல்படுகிறார் என்பதை பெரிதும் தீர்மானிக்கிறது. மனிதன் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டவன் என்று விசுவாசிக்கிறவர்களைக் காட்டிலும் மனிதன் மிருகத்தைக் காட்டிலும் வித்தியாசப்பட்டவனல்ல எனும் விசுவாசமுள்ளவர்கள் வித்தியாசமாய் நடந்து கொள்கிறார்கள். ஒரு தனிநபர் சிருஷ்டிப்பை விசுவாசித்து வாழ்வதைக் காட்டிலும் இந்த உலகம் தேவனால் சிருஷ்டிக்கப் பட்டது என்பதை விடுத்து ஏதோ தற்செயலாய் தோன்றியது என்று விசுவாசிப்பதால் அவர் வித்தியாசமான வாழ்க்கையை வாழ்கிறார். தேவனிடத்திலும், திருமறையிலும், இயேசு கிறிஸ்துவிலும், அல்லது பரலோகம் மற்றும் நரகத்திலும் வைக்கும் விசுவாசம் ஒருவருடைய அன்றாட எண்ணங்களையும் செயல்களையும் மாறுதலடையச் செய்கிறது. கிறிஸ்தவ விசுவாசங்கள் வாழ்க்கை நெறியை தெளிவுபடுத்தி, தினந்தோறும் தேவனைப் பிரியப்படுத்தத்தக்க வாழ்க்கைக்கான ஒரு வழியையும் பரிபூரண ஜீவியத்தை அனுபவிக்கவும் வழிநடத்துகிறது.*

*ஒவ்வொரு தலைப்பிலும் திருமறை போதிப்பது என்ன என்பதையும், கிறிஸ்தவத்தின் அடிப்படை விசுவாசங்களை இன்னும் திட்டமாய் நாம் எல்லாருமே அறிந்து கொள்ளவும் இந்த தொடர் பாடங்கள்*

மூலமாய் சுருக்கமாக முன்வைப்பதே நமது நோக்கமாகும். ஆகையால், ஆராய்ச்சி பண்ணப்பட வேண்டிய முதல் விசுவாசம் இதுதான்: *கிறிஸ்தவர்கள் திருமறை தேவனுடைய வசனம் என்று விசுவாசிக்கின்றனர்.* தேவனிடத்திலோ கிறிஸ்துவினிடத்திலோ வைக்கும் விசுவாசத்தைக் காட்டிலும் திருமறையை விவாசிப்பது முக்கியமானதல்ல. ஆகையால், இந்தத் தொடரில் உள்ளடக்கிய மற்ற எல்லா தலைப்புகளுக்கும் இந்த விசுவாசமே அடிப்படையாக இருக்கிறது. பின்வரும் பாடங்கள் ஒவ்வொன்றும் திருமறையின் போதனையை வலியுறுத்துவதால், துவக்கத்திலிருந்தே திருமறை தேவனுடைய வசனம் என்பதை நாம் உறுதிப்படுத்தியாக வேண்டும்.

திருமறை போதிக்கிறதை கிறிஸ்தவர்கள் ஏன் விசுவாசிக்கிறார்கள் என்பது இந்தப் பாடத்தின் விவாதம் அல்ல, இதுபோலவே ஜனங்கள் ஏன் தேவனிலோ கிறிஸ்துவிலோ விசுவாசிக்க வேண்டும் என்று பின்வரும் பாடங்களில் விவாதிக்கப் படாதது போலவே இதுவுமாகும். மாறாக "ஏன்" என்பதில் கவனம் செலுத்தப்படாமல் "என்ன" என்பதிலேயே நாம் ஆர்வம் காட்டுகிறோம் - திருமறை தன்னில் தானே என்ன சொல்லுகிறது.

திருமறை சுத்தமாக மனிதனுடைய பதிவேடுகள் என்று சிலர் விசுவாசிக்கின்றனர். அவர்களைப் பொறுத்த மட்டில் அது ஒரு மகத்தான புத்தகம்தான், ஆகிலும் வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதின புத்தகத்தைக் காட்டிலும் தேவனால் ஏவப்பட்டதல்ல. திருமறையைக் குறித்து இப்படிப்பட்ட கண்ணோட்டம் கொண்டுள்ளவர்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மக்கள் ஆர்வமுடன் படிப்பது போலவே திருமறையை ஆர்வமுடன் படிக்கக்கூடும். அவர்கள் திருமறையில் வாழ்வின் வழிகாட்டல்களை கொண்டுள்ளதாகவும், இது பெரிய தத்துவ ஞானிகளின் வாழ்க்கை நெறிமுறை எழுத்துக்களுக்கு ஒப்பானவைகளாகவும் காணலாம். எப்படியாயினும், அதை தெய்வீக வழிகாட்டலாக அவர்கள் காணுவதில்லை.

மற்றவர்கள் திருமறையின் சில பகுதிகளே ஏவப்பட்டதாக விசுவாசிக்கின்றனர். முக்கியத்துவம் பெற்ற சில சத்தியங்களை திருமறை கூறும் விதம் சரியென தோன்றும்போது அவை தேவனால் எழுதப்பட்டதாக விசுவாசிக்கின்றனர், ஆகிலும் திருமறையின் பல பகுதிகளும் மனுஷனால் எழுதப்பட்டவைகளையே கொண்டுள்ளது என்றும் நம்புகின்றனர். அவர்களுடைய பார்வையில், திருமறை போதிக்கும் தகவல்களை வேறு ஆதாரங்களைக் கொண்டு சரிபார்த்தோ அல்லது பொது அறிவுக்கும் மனித ஞானத்துக்கும் ஒத்துப்போகக் கூடியவைகளுமாயிருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளலாம் என்று எண்ணுகின்றனர்.

*பாரம்பரிய (மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாத கொள்கை அல்லது சுவிசேஷ)*[2] *விசுவாசம் திருமறை முற்றிலும் தேவனால் ஏவப்பட்டது* என்பதுதான் - அது வார்த்தைகளால் ஏவப்பட்டதும் (அதாவது வசனங்கள் ஏவப்பட்டவை) தவறில்லாதவையும் (அதாவது இந்த வசனங்களில் தவறுகள் எதுவுமில்லாதவை) ஆகும்.[3]

கிறிஸ்தவர்கள் வசனங்களை வசனரீதியாகப் பார்க்க வேண்டும்! ஏன்? ஏனெனில் ஆதிசபையும், அப்போஸ்தலர்களும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் வசனங்களை தேவனுடைய வார்த்தைகளாக ஏற்றுக்கொண்டார்கள் என்பதை திருமறை பிரதிபலிக்கிறது! கிறிஸ்தவர்களாகிய நாம், இயேசு

கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள், இயேசுவை பின்பற்றுகிறவர்களாகிய நாம், வசனங்களைக் குறித்து அவர் கொண்டிருந்த அதே விசுவாசத்தைக் கொண்டிருத்தல் அவசியம்! அந்த விசுவாசம் அப்போஸ்தலர்களிடம் தொடர்ந்து நிலைத்திருந்தபடியால் இயேசு தமது பிரதான கட்டளையை அவர்களுக்கு கொடுத்து அனுப்பியபோது, அவர்களுடைய பிரசங்கத்தாலும் போதனையாலும் சபையாய் உருவெடுத்தது. ஆகையால், இன்றைக்கு கர்த்தருடைய சபையின் அங்கத்தினர், முதல் நூற்றாண்டு சபை வசனத்தைக் குறித்துக் கொண்டிருந்த அதே கண்ணோட்டத்தை பெற்றிருப்பது அவசியம். அந்தக் கண்ணோட்டம் என்ன?

## வேதவசனங்களெல்லாம் தேவனால் ஏவப்பட்டவைகள்

உண்மையில் பழைய ஏற்பாட்டுக் காலத்தில், நூற்றுக்கணக்கான முறை தீர்க்கதரிசிகள், "என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று அறிவித்தார்கள். உதாரணமாக, ஆமோஸ் 1, 2-ல், ஆமோஸ் "என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றோ (அல்லது அதற்குச் சமமான வார்த்தைகளையோ) முப்பத்தி ஒரு வசனங்களில் ஒன்பது முறை குறிப்பிடுகிறார்.

அதேபோல், புதிய ஏற்பாடும் வசனங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டது என்று போதிக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது,

> கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறு வயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய, மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:15-17).

இந்த வசனப்பகுதியின்படி, "வேத வாக்கியங்களெல்லாம்" ...

(1) *தேவனால் அருளப்பட்டது*. அதாவது, அது "தேவன் ஊதினார்" - தேவன் மனுஷர்களுக்கு தமது செய்தியைக் கொடுத்தார், அவர்கள் அவைகளை நமக்காக எழுதினார்கள்.

(2) *ஆவிக்குரிய அனைத்து தேவைகளுக்கும் அவைகள் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றன.*

(3) தேவனுடைய மனுஷனை "*முழுமையானவனாக*" (அல்லது தேறினவனாக) இருக்கும்படியும், "எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகும்படிக்கும்," அவை *முழுமையானவை* (வலிறுத்துதல் என்னுடையது).

(4) *இரட்சிப்புக்குத் தேவை* (அது "ஞானமுள்ளவனாக்கி இரட்சிப்புக்கு நடத்துகிறது").

இந்த வசனப்பகுதியில் "வசனம்" என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் பழைய ஏற்பாட்டையும் உள்ளடக்கியே பேசுகிறது, புதிய ஏற்பாட்டு

எழுத்துக்களும் வசனங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

> மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் (2 பேதுரு 3:15, 16).

"*மற்ற* வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலவே" சிலர் பவுலின் எழுத்துக்களையும் புரட்டுவதாக பேதுரு குறிப்பிட்டார் (வலியுறுத்துதல் என்னுடையது). பவுல் எழுதியவைகளை வசனமாக பேதுரு மதித்தார்! ஆகையால், பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டுமே "வேதவாக்கியம்" எனும் பதத்திற்குட்பட்டவை.

2 பேதுரு 1:20, 21-ல் நாம் வாசிப்பதாவது,

> வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.

இந்த வசனங்கள் தீர்க்கதரிசனங்களின் தோற்றத்தைக் குறித்துப் பேசுகின்றன: வேத வாக்கியங்களை எழுதினவர்கள் நிகழ்வுகளின் சுய விளக்கத்தைக் கொடுக்க வில்லை - அதாவது, தேவன் என்ன விரும்புகிறார் என்பதைக் குறித்துத் தங்களுடைய சொந்தக் கருத்துக்களைக் கொடுக்கவில்லை - எனவே அவர்கள் எழுதியவைகளெல்லாம் "மனுஷருடைய சித்தத்தினால்" உருவானவைகளல்ல. மாறாக, பரிசுத்த ஆவியானவர் சொல்லும்படி ஏவியவைகளை அவர்கள் எழுதினார்கள்.

இயேசுவினால் சொல்லப்பட்ட ஒரு வாக்கியத்தை பதிவு பண்ணின யோவான் குறிப்பிடுகிறதாவது:

> "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தமாக: 'தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா'? தேவ வசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க (வேத வாக்கியமும் தவறாததாயிருக்க), பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற, 'நான் என்னைத் தேவனுடைய குமாரன்' என்று சொன்னதினாலே 'தேவதூஷணம் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா'?" (யோவான் 10:34-36).

இயேசு தாமே இந்த வசனப் பகுதியில் வேத வாக்கியங்களை "தேவ வசனம்," என்று குறிப்பிட்டுப் பேசுகிறார், மேலும் அவர் தொடர்ந்து "வேத வாக்கியம் தவறாததாயிருந்தது" என்றும் குறிப்பிட்டார். தேவனுடைய வசனம் முழுமை

பெற்றதும் நிறைவானதுமாகும்; அவை மாற்றியமைக்கக் கூடாதவை. இயேசுதாமே வேத வாக்கியங்கள் ஏவப்பட்டவை என்பதையும் அது மாத்திரமே அதிகாரமளிக்கப்பட்டது என்பதையும் விசுவாசித்தார்!

மேலே குறிப்பிட்ட வசனப்பகுதிகளின் செய்தியை ஒத்துக்கொள்ளும் சிலர் அந்த வசனப்பகுதியில் குறிப்பிடப்படும் தனித்தனி *வார்த்தைகள்* ஏவப்பட்டவைகளல்ல என்கின்றனர்; திருமறை "வார்த்தைகள் ஏவப்பட்டவை" என்பதை மறுக்கின்றனர், ஆயினும், கலாத்தியர் 3:16 வேறு வகையாகப் பேசுகிறது. பவுல், "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் செய்யப்பட்டன; 'சந்ததிகளுக்கு' என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல்; உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்து சொல்லியிருக்கிறார். அந்த சந்ததி, கிறிஸ்துவே," என்று எழுதினார். இந்தப் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியில் வரும் ஒரு தனிச் சொல்லின் (வார்த்தையின்) எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பவுல் தர்க்கிக்கிறார். வேத வாக்கியங்கள் ஒவ்வொரு தனிப்பட்ட வார்த்தைகளும் ஏவப்பட்டவை என்று பவுல் தெளிவாக விசுவாசித்தார்.

எபிரெயர் 1:1, 2 ல் மேலும் சாட்சியங்கள் காணப்படுகிறது. "பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்." "தேவன் ... திருவுளம் பற்றினார்"! உலகத்தை உண்டாக்கிய சர்வ வல்லமையுள்ள தேவன் தமது சிருஷ்டியாகிய மனுஷனுக்கு தமது சித்தத்தை வெளிப்படுத்தினார்! எழுத்தாளர் கூடுதலாக தேவன், பூர்வ காலங்களில், "தீர்க்கதரிசிகள் மூலமாய்" பேசினார் என்று குறிப்பிட்டார். ஆதலால், தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலமாய் பேசின வார்த்தைகளை பழைய ஏற்பாடு உள்ளடக்கியுள்ளது. பிறகு அவர் இன்றைக்கு, சபையின் யுகத்தில், தமது குமாரனாகிய, இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் பேசுகிறார் என்று குறிப்பிட்டார். இயேசு சொன்னவைகளும், தமது அப்போஸ்தலர்களும் சுவிசேஷகர்களும் சொல்லும்படியாகவும் எழுதும்படியாகவும் அருளியவைகளும், தேவனால் ஏவப்பட்டவைகளாகவே மதிக்கப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் எழுதியவைகளை தெய்வீக ஏவுதலாகக் கருத முடியுமா? பவுல் எழுதினார்,

> ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக் கொண்டபோது, அதை மனுஷ வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது (1 தெசலோனிக்கேயர் 2:13).

பவுல் சொன்னவைகள் "தேவ வசனமாக" கருதப்படுமேயாகில், பிறகு அவர் *எழுதினவைகளும்* "தேவ வசனமாக" ஏற்றுக் கொள்ளப்படத்தான் வேண்டும். அதேபோல, புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளவைகளெல்லாம் "தேவ வசனத்தின்" ஒரு பாகமாக ஏற்கப்பட வேண்டும்.

இந்த வசனப்பகுதிகள் அனைத்தும் திருமறை ஏவப்பட்ட தேவனுடைய வசனம் எனும் பாரம்பரியக் கண்ணோட்டத்தை மீண்டும் வலியுறுத்துகின்றன! உண்மையாக கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் சந்தோஷமாக இந்த அடிப்படை உபதேசத்தை ஏற்றுக் கொள்வார்கள்; அவர்கள் வேத வாக்கியங்களை வேத வாக்கிய கண்ணோட்டத்திலேயே காண்பார்கள்.

வேதவாக்கியங்கள் குறித்து திருமறை பேசும் வேறு சில காரியங்கள் யாதெனில், *திருமறை முழுவதும் தேவனால் ஏவப்பட்டிருந்தாலும், இன்று நமக்கு நேரடிக் கட்டளைகளை கொண்டிருக்கும் பகுதி புதிய ஏற்பாடுதான்.* பழைய பிரமாணம் - பழைய ஏற்பாடு - எடுபட்டது; இனியும் அது நேரடியாக அவைகள் நமக்குப் பொருந்தக் கூடியவைகளல்ல. நியாயப்பிரமாணம் "கிறிஸ்துவினிடத்தில் நம்மை வழிநடத்தும் உபாத்தி" என்று குறிப்பிடும் பவுல் தொடர்ந்து, "விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்கு கீழானவர்களல்லவே" என்று குறிப்பிடுகிறார் (கலாத்தியர் 3:24, 25). தேவனுடைய மக்கள் இனியும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டிய கட்டாயத்தில் இல்லை (கொலோசெயர் 2:14; எபேசியர் 2:15; எபிரெயர் 8:6-13; 10:9 ஆகியவைகளையும் காண்க). ஆயினும் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டிற்கு கீழானவர்களல்ல என்பது நமக்கு எவ்விதத்திலும் அது மதிப்பற்றது என்று பொருளல்ல. அதின் கட்டளைகள் நம்மைக் கட்டுப்படுத்தாமல் இருந்தபோதிலும், பழைய ஏற்பாட்டை நாம் படிப்பது இன்னமும் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16, 17; குறிப்பாக காண்க ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:11).

## திருமறை பரிசுத்தமானதும், விலையேறப் பெற்றதும் வல்லமையுள்ளதுமாகும்

திருமறை தேவனுடைய வசனம் என்று விசுவாசிப்போர் அனைவரும் அதேபோல கீழ்வரும் உண்மைகளையும் ஏற்றுக் கொள்வார்கள்:

*திருமறை பரிசுத்தமானது;* அது, பெரும்பாலும், "பரிசுத்த வேதாகமம்" என்று தலைப்பிடப் படுகிறது. அது தேவனுடைய புத்தகமாக இருக்கிறது. அது பரிசுத்தமானது என்பதால், அழிவில்லாததும் ஆகும் (மத்தேயு 24:35; 1 பேதுரு 1:23-25). மேலும், அது தேவனுடைய வசனமாகையால், அது மதிக்கப்பட வேண்டியதும் கனப்படுத்தப்பட வேண்டியதுமாகும். தங்களுக்கு ஏற்ற வகையில் அதில் எவ்வித மாற்றத்தையும் ஜனங்கள் செய்ய உரிமையற்றவர்கள் (கலாத்தியர் 1:8, 9; வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19; 2 யோவான் 9).

*திருமறை விலையேறப் பெற்றது.* திருமறை தேவனுடைய வசனமாதலால், நாம் அதை நேசிக்க வேண்டும் (சங்கீதம் 119:113). சங்கீதக்காரனுக்கு அது என்னவாக இருந்ததோ அதுவாகவே நமக்கும் இருக்கவேண்டும், அவர் கர்த்தருடைய நியாயங்கள் "பொன்னிலும் விரும்பப் படத்தக்கதும்" "தேனிலும் ... மதுரமுள்ளதுமாகும்" என்று சொன்னார் (சங்கீதம் 19:10).

*திருமறை வல்லமையானது.* அது "ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயுமிருக்கிறது" (எபிரெயர் 4:12). அதற்கு வல்லமையிருக்கிறது:

- போதிக்கப்படும்போது *"இராஜ்யத்தை வளரச்செய்ய"* (லூக்கா 8:11).
- கீழ்ப்படிகிற *மக்களை இரட்சிக்க* (1 பேதுரு 1:22-25; யாக்கோபு 1:21).

- *கிறிஸ்தவர்களை கட்டியெழுப்பவும்,* தேவனுடைய பிள்ளைகள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் படியாக (நடபடிகள் 20:32).
- *கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் சோதனைகளை மேற்கொள்ள* (மத்தேயு 4:4, 7, 10).
- தீய சக்திகளுக்கு எதிரான போராட்டத்திற்கு உதவ ஏதுவாக *கிறிஸ்தவர்களின் ஆயுதமாக* (எபேசியர் 6:17).
- *அவிசுவாசிகளை மனமாற்ற* (மாற்கு 16:15, 16; மத்தேயு 28:18-20; ரோமர் 1:16).

## முடிவுரை

கிறிஸ்தவர்கள் திருமறை தேவனால் ஏவப்பட்டது என்று விசுவாசிக்க வேண்டும். ஆயினும் சத்தியத்தின்படி நடவாமல் சத்தியத்தை விசுவாசிப்பது மட்டும் எந்த நன்மையையும் பயக்காது. "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்"; ... "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதில் நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்றகிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" (யாக்கோபு 1:22, 25; 2:20 யும் காண்க).

நாம் உண்மையாகவே திருமறை தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வசனம் என்று விசுவாசிப்போமானால் நாம் செய்ய வேண்டுவது என்ன? முதலாவதாக, நாம் தேவனுடைய வசனங்களை மட்டுமே போதிக்கிறோம் என்பதை உறுதிப்படுத்தப் போராடுவோம் மற்றும் அவருடைய வசனத்தில் காணப்படாத எந்த போதனையையும் வெறுத்து விடுவோம்!

இரண்டாவதாக, திருமறை வெளிப்படுத்தும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற - நம்மால் இயன்றவரை - தீர்மானிப்போம். திருமறை தேவனுடைய கட்டளைகளை கொண்டுள்ளது. அந்தக் கட்டளைகளெல்லாம் வெறும் ஆலோசனைகள் மாத்திரமல்ல, அல்லது தேவனுடைய எந்தக் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிவது என்று பொறுக்கியெடுத்து தெரிந்து கொள்வதுமல்ல. தேவன் எப்பொழுதுமே தாம் வைக்கும் கோரிக்கைகளை எல்லாம் ஜனங்கள் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கிறார்! ஆதலால், நாம், கீழ்ப்படிதலுள்ளவர்களாய், திருமறையை வாசித்து, சாமுவேலின் எண்ணத்தோடு: "கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன்" என்று தீர்மானிக்க வேண்டும் (1 சாமுவேல் 3:9; வசனம் 10 ஐ பார்க்கவும்). தேவனுடைய வசனத்தில் நாம் கற்பதைச் செய்யும்படி நம்முடைய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

நான் பிரசங்கித்த ஒரு சிறிய சபையினர் ஒவ்வொரு உயர்நிலை மாணவருக்கும் பட்டமளிப்புப் பரிசாக ஒரு திருமறையை வழங்கினர். ஒவ்வொரு திருமறைக்குள்ளாகவும் இந்த இளைஞர்களுக்கென எழுதப்பட்ட சில கருத்துக்கள் வருமாறு:

> உயர்நிலைப் பள்ளியில் நீ பட்டம் பெற்றமைக்கு உன்னை வாழ்த்துகிறோம்! அந்த நிகழ்ச்சியை கொண்டாடும் பொருட்டு, இந்தத்

> *திருமறை உனக்கு பரிசளிக்கப்படுகிறது. அதை தேவனுடைய வசனமாக நீ ஏற்றுக்கொள்வாயாக, படிப்பதை வழக்கமாகக்கொள், நேர்மையுடன் கற்றுக்கொள், அதில் ஊக்கமாக அன்புகூரு, மற்றும் முழுமையாக அதற்குக் கீழ்ப்படி. உன்னுடைய எஞ்சியுள்ள வாழ்வின் ஒவ்வொரு படியிலும் அது உன்னை வழி நடத்தட்டும்.*

*திருமறை தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட ஒன்று. அதை நாம் வாசிக்கவும், அதைக் கற்றுக் கொள்ளவும், நேசிக்கவும், அதற்குக் கீழ்ப்படியவும் செய்வோமாக! திருமறை தேவனுடைய வசனம் என்று விசுவாசிப்பதினால் அது உங்கள் வாழ்க்கையை மாற்றட்டும்!*

---

*குறிப்புகள்*

[1]*இது விக்டர் ஹியுகோவின் பத்தியின் சாராம்ஸ மாற்று வார்த்தைகள். இன்னும் மேன்மையான நேரடி மொழியாக்கம் "படையெடுத்து வரும் போர் வீரர்கள் எதிர்க்கப்படலாம்; ஆனால் கருத்துக்களின் படையெடுப்பை எதிர்க்க முடியாது"* (Victor Hugo, *The History of a Crime: The Testimony of an Eye-Witness,* trans. T. H. Joyce and Arthur Lockyer [London: Sampson Low, Marston, Searle, & Rivington, 1878], 4:243). [2]*"மாற்றத்தை விரும்பாதவர்கள்" அல்லது "சுவிசேஷகர்கள்" ஆகியோர் புராட்டஸ்டண்ட்கள் (அல்லது கத்தோலிக்கர்கள் அல்லாதவர்கள்) வசனத்தைக் குறித்து உயர்ந்த கண்ணோட்டமுடையவர்கள்; இவர்கள் திருமறையின் ஒவ்வொரு வார்த்தையும் ஏவப்பட்டவை என்று விசுவாசிக்கின்றனர். இவர்களுக்கு முரணான கருத்துடையவர்கள் "மார்க்க சுதந்திரவாதிகள்" அல்லது "மெயின்லைன்" எனும் திருமறை வார்த்தைகள் தோறும் ஏவப்பட்டவை என்பதை ஏற்றுக் கொள்ளாத புராட்டஸ்டண்டுகள்.* [3]*இந்தக் கண்ணோட்டத்தின்படி, திருமறைப் புத்தகங்களின் சுய கையெழுத்துக்கள் - மூலப் பிரதிகளின் எழுத்துக்கள் - தெய்வீக ஏவுதலையுடையவைகளும் எவ்வித தவறுகளும் இல்லாதவை. நூற்றுக் கணக்கான வருடங்கள் அந்த மூலப்பிரதிகள் தெய்வீக ஏவுதல்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் கையெழுத்துக்களால் ஏவப்படாத நபர்களைக் கொண்டு கையெழுத்துப் பிரதிகளாக எழுதப்பட்டன. இந்த செயலாக்க காலத்தில் மூல வசனப்பகுதிகளில் சில தவறுகள் நுழைக்கப்பட்டன, ஆகிலும் அந்த தவறுகளில் எதுவும் திருமறை உபதேசத்தை பாதிக்க வில்லை.*